உ

வேலுமயிலுந்துணை.

சுப்பிரமணியர்பேரில் கீர்த்தனங்கள்.

இஃது
சென்னை-சூளை
ஸ்ரீ 'பாரதி' அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1923

58

உ

கடவுள் துணை.

சுபபிரமணியர்பேரில் கீர்த்தனை.

விருத்தம்.

எண்ணிலாச்செனனம் யெண்பத்துநான்கு
லெட்சமாய்ப் பகுத்துப்பூர்வ
புண்ணியவசத்தால் பொருவிலாமானிடப்
புருடராய் வடிவெடுத்திந்த
மண்ணினிற்பிறந்துன் மலரடிக்காளாய்
வந்திலாச்செனன மெச்சென்மம்
வெண்ணிலாவுமிழும் வேற்கரம்பிடித்த
மெய்யனே ஆறுமாமுகனே.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆறுமுகாயென்னைக் காருங்காருமையா-நல்ல
அரவணிந்தோன்மகிழ் சரவணையிலுதித்த ஆறு

அநுபல்லவி.

வாருநற்சமையபந்திருவள்ளிதெய்வானைசென்றிரு
வஞ்சியுடனேயென்னுளுந் தஞ்சைவடவாயில்வாழும்

சரணங்கள்.

மண்டலத்திலுள்ளளவுந் தொண்டர்மனக்கோரிக்கை
மாதபூசம்நாளில் வந்துநிறைவேற்ற
கொண்டுவந்தகாவடியிலுண்டகனசக்கரைபாலை
குளிரஅபிஷேகஞ்செய்து மலர்தூற்ற
அண்டர்தொழும்பாதா யென்றுதெண்டனிட்டு
முன்னேநின்ற அவரவர்நினைத்தயெண்ணம்
தவறுமல் முடிக்கும்வண்ணம் ஆறு

நீட்டியகூர்வேலினுலே மாட்டியசூரனைவென்ற
நின்னுடையவல்லமையை யென்சொல்வோ
நாட்டிலுள்ளஉன்னடியார் எட்டிலடங்குமோசொல்ல
நானதிலோரந்தரங்கபக்தனல்லவோ
கூட்டியெனையாதரித்து வோட்டிடுந்துயர்பிரித்து
குன்னமில்லாவரந்தந்து வன்னமயிலேறிதந்து ஆறு

தாசர்தயாநீயென்று மாசில்லாமலுன்னைவேத
சாஸ்திரமனைத்து முறையிடுகிறதே

யீசனே கண்கண்டதெய்வங் காசினியில்நீயேஎன்றும்
யெல்லவர்க்குங்கண்ணில் ஈாணப்படுகிறதே
தேசிகனேநானுமுன்னை ஆசையோடடுத்தயென்னை
திருவிழியால்நோக்கிக்கொஞ்சங் கிருபைவைத்தாள்
நீயேதஞ்சம் ஆறு

முத்துக்குமரேசாவென்று யெத்தனைவிதம்வருந்தி
முறையிட்டாலுமக்குச் சேழ்க்கவுமில்லை
உத்தமனேஉன்னைநம்பி இத்தனைநாள்காத்திருந்தும்
உன்னருள்பெறுமலின்னம்படவோதொல்லை
சித்தமுற்றயென்விசாரம் பததம்வைத்துதீரின்னேரம்
செம்பினேன் வெங்கடருவுசிஷன்
சுப்ரமண்யா வுந்தன்தாசன் ஆறு

வேறு மெட்டு.

விருத்தம்.

அலைகடற்றன்புனலள்ளியேகுளித்த
அகஸ்தியர்தனக் கருள்புரிந்தோய்
மலைக்குறவள்ளியை மணந்திடும்பொருட்டில்
வையத்துளெவர்களும்வியப்ப

சிலைக்கரவேடந்திகள் முடிவேந்தன்
செந்துசிற்றம்பிரானெனவும்
நிலைத்திடாவடிவம் நிமிஷத்திலெடுத்த
நின்மலர்செய்திடுங்கருணை.

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஜம்பைதாளம்.

பல்லவி.

கருணையின்னமும் வல்லையோகுகாயென்னைக்
காரக்கக்கடனுமில்லையோ.

அநுபல்லவி.

தருமலர்சோலைசூழுந் தஞ்சைவடக்குவாயில்
பெருமையாயமர்ந்தகெம்பீராசூரசம்மார கரு

சரணங்கள்.

ஐயா அண்டினேன்மெய்யா-யென்னை
யாதரித்தாளும்நீர்-முருகையா
வையகமறியவுன்மைந்தனென்றிருக்கச்
செய்யாதீர்என்மேல்மோடி சிலாகுணவடிவேலா கரு

வந்தாள்வரந்தந்தாள் தருணம்
மரவேன்கனவிலும் வந்தாள்

இந்தச்சொல்லுறுதியென் றிருதயத்தில்நம்பும்
கந்தாயெந்தனையின்று காவாசிவயோகா கரு

ஏதோயித்தனைவாதோயெளி
யேன்மீது மனமிரங்காதோ

வாதைநானடையவும் வர்மம்நீர்செய்யலாமோ
போதும்போதும்சாதுவைபோகாதெய்வானைமோகா

காரமோகடுந்தூரமோ-யென்னைக்
காற்பதுஉமக்கொருபாரமோ

ஆருதித்தேன்பாடி ஆனந்தபைரவியால்
பாருங்கிருபைகுருபரனே பன்னிருகரனே. கரு

ஏசல்

இராகம்-பியாகு-ஜம்பைதாளம்.

வாவாகுமரகுருபரனே-சுவாமி வா
தேவாதிதனைக்காத்த செழுங்குணகரனே
திருவருள்பொழி துரந்தரனே துரந்தரனே
துரந்தரனே-சுவாமி வாவா
ஜெனனமரணமின்றி திகழ்மோனவடிவே
செப்புநான்மறை கெட்டாமுடிவே கெட்டாமுடிவே
கெட்டாமுடிவே-சுவாமி வாவா

தஞ்சமென்றுனைநம்புந் தாசர்தயாநிதியே
தமியேனுக்குன்பாதங்கெதியே பாதங்கெதியே
பாதங்கெதியே-சுவாமி வாவா

யாரோவென்றனைநீயும் அகத்திலெண்ணுதே
அடியேன்மேல்வாது பண்ணுதே பண்ணுதே
பண்ணுதே-சுவாமி வாவா

மாதாபிதாகுரு தெய்வமும்நீயே
மைந்தன்மேல்கிருபை செய்வாயே-செய்வாயே
செய்வாயே-சுவாமி வாவா

தாமதமினிசெய்தால் சகிப்பேனோயானே
சரணமடைந்தேனென்கோனே யென்கோனே
யென்கோனே-சுவாமி வாவா

தாசனைக்கார்த்திட சமயமுமீதே
தாரும்வுன்னடியினையிப்போதே-யிப்போதே
யிப்போதே-சுவாமி வாவா

வெங்கட்ருவுகிஷனுன் மேல்பதம்பாடி
வேண்டினேன்மிகவுங் கொண்டாடி கொண்டாடி
கொண்டாடி-சுவாமி வாவா

சுப்பிரமணியர் கீர்த்தனம்

முற்றிற்று.